


නාවැලි NAAVELI

# நாவெளி

பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை

Divisional Monthly e-Magazine

ප්‍රාදේශීය මාසික ඉ-සංරාව



மலர்: 03 ✦ இதழ்:19 ✦ 2024ஆம் வருடம் பங்குனி மாதம் இருபத்தைந்தாம் திகதி

# சர்வதேச மகளிர் தினம் - 2024

(நிருபர்.D.றொசாயிறோ) 2024ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினமானது "அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப்பொருளில் நாவிதன்வெளி பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவு, சமுர்த்தி பிரிவு, கிராம அபிவிருத்தி பிரிவு என்பன இணைந்து நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திரு.P.பிரணவரூபன் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் R.ராகுலநாயகி அவர்கள் கலந்து கொண்டதுடன், விஷேட அதிதிகளாக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. T. கிருபைராஜா அவர்களும், பிரதேச செயலக கணக்காளர் திரு. கு.றிஸ்வி யாஹ்சர் அவர்களும், DEAF LINK அமைப்பின் இணைப்பாளர் திரு. T.இளையராஜா அவர்களும், கௌரவ அதிதிகளாக நிருவாக உத்தியோகத்தர்

தொடர் 07ஆம் பக்கம்...



## "நம்பிக்கைக்கான நூல்" மற்றும் "வாழ்க்கைக்கான வெளிச்சம்"

### -உபகரணங்கள் வழங்கி வைப்பு-



(நிருபர்.T.சசிதேவி) நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் இழப்பீடுகளுக்கான அலுவலக நிதி ஒதுக்கீட்டின் கீழ் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து "நம்பிக்கைக்கான நூல்" மற்றும் "வாழ்க்கைக்கான வெளிச்சம்" எனும் தொனிப்பொருளின் கீழ் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனை-01 கிராம அலுவலர் பிரிவில் மெழுகுதிரி உற்பத்தி செய்யும் பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கல் மற்றும் சாளம்பைக்கேணி-04 கிராம அலுவலர்பிரிவில் நெசவு உற்பத்தியினை மேற் கொள்ளும் பயனாளிகளுக்கான

தொடர் 07ஆம் பக்கம்...

## சிவராத்திரி விழா நிகழ்வு



(நிருபர்.K.நீலேந்திரன்) நாவிதன்வெளி பிரதேச செயலாளர் R.ராகுலநாயகி அவர்களின் வழிகாட்டலில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார பிரிவு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த 2024ஆம் ஆண்டிற்கான சிவராத் திரி விழா நிகழ்வுகளும் அதனோடு இணைந்த வகையில் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்க ளுக்கான ஆக்கத்திறன் போட்டி நிகழ்வுகளும் 2024.03.08 ஆந் திகதியன்று இடம்பெற்றன.

தொடர் 07ஆம் பக்கம்...

## சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக்கூடம் திறந்துவைப்பு



(நிருபர்.கே.எம்.றினோஸ்)நாவிதன்வெளி பிரதேச செயலாளர் மற்றும் பிரதித்திட்டமிடல் பணிப்பாளரின் பணிப்புரையின் கீழ் சிறு கைத்தொ ழில் அபிவிருத்தி, தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கூடம் 28.02.2024 ஆம் திகதி மத்திய முகாம் 02 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பழைய சந்தைக் கட்டத்தில் இடம்பெற்றது.

தொடர் 07ஆம் பக்கம்...

# ஆசிரியரிடமிருந்து..

"நாவெளி" மலர்-03 இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. நாற்திசையும் பரந்து கிடக்கின்ற பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 03 வெளிவருகின்றது. உண்மையில் சிலர் வெளியுலக சிந்தனை சிறிதும் இல்லாது, தனது வீடு, தனது குடும்பம் என்று வாழ்ந்து விட்டுச் சென்று விடுகின்றனர். அத்தகைய சில உள்ளங்களையும், அந்த உள்ளங்களை நேசிக்கும் நேசக் கரங்களையும் பற்றிப் பிடிக்கும் சிந்தனை கொண்ட சஞ்சிகையாக "நாவெளி" இலத்திரனியல் சஞ்சிகை இருக்குமென நம்புகின்றேன். ஆம், நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் பரந்துபட்ட பார்வைப் பரப்புக்குள் இருந்து வெளிவருகின்ற "நாவெளி" இலத்திரனியல் சஞ்சிகை உங்களை வெளிஉலகுக்கு கொண்டு செல்லத்தான் போகின்றது.

சிலருக்கு பொய் உரைத்தல் பிடிக்காது. சிலருக்கு தவறு செய்தல் பிடிக்காது. சிலருக்கு பிழைசெய்தல் பிடிக்காது. சிலருக்கு எதிலும் பிழை செய்யப் பிடிக்காது. எனது துய்ப்பின் அடிப்படையில் தமிழில் எழுதுபவர்கள் செய்யும் பிழை உண்டு. அவை, ஒற்றுப்பிழை, எழுத்துப் பிழை, சொற்பிழை, தொடரமைப்புப் பிழை, மரபுப்பிழை நடைதெளிவின்மை என்பன.

பொதுவாக பலர் செய்யும் ஒரு தவறு என்ன வென்றால்,"அவைகள்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது. உதாரணத்துக்கு, தவறான ஒருபிரயோகம் ஒன்றைப் பார்ப்போம். அங்கே ஐந்து பறவைகள் நிற்கின்றன. அவைகள் மிகவும் அழகாக உள்ளன.

அதன் சரியான பிரயோகம் - அங்கே ஐந்து பறவைகள் நிற்கின்றன. அவை மிகவும் அழகாக உள்ளன. அவை என்றாலே அது பன்மையைத்தானே குறிக்கும். அது ஒருமை. அவை பன்மை. அவை என்பதற்கு சபை என்ற பொருளும் உண்டு. அதன் பன்மையைக் குறிக்கும் போது, அவைகள் என்று சொல்லலாம். எனவே பொதுவாக, அவைகள் என்று பன்மைக்கு சொல்வது பிழையாகும். ஆங்கிலத்தில் Conversational Language என்று ஒன்று உண்டு. அதனை உரையாடல் மொழி எனக் கொள்ளலாம். இதில் தம் எண்ணங்களை அழகாகக் கூறுபவர்கள் உண்டு. ஆனால், அவர்கள் செய்யும் பிழை, உரையாடல் மொழியில் எழுதுதல், அதனை முடிந்த அளவு தவிர்க்கலாம். Academic Writing எனும் கல்வியியல் மொழியில் எழுதப் பழகினால் நன்றாக அமையும். மொழிகள் மிகவும் அழகானவை. அதில் தமிழ் மிக அழகிய மொழி. அதனை அவ்வாறே எழுதினால் அழகு கெடாது, இன்னும் மெருகேறும்.

என்றும் அன்புடன்...
ஆசிரியர்

# மரியாதை உள்ளோருக்கான 09 கட்டளைகள்

1.யாரேனும் உங்களுக்கு கை கொடுக்க வரும்போது நீங்கள் கதிரை ஒன்றில் இருப்பீர்களானால் எழுந்து நின்று கொடுங்கள் அவர் சிறியவரோ ஏழையோ யாராகினும்

2.உங்களை நம்பி யாரேனும் உங்கள் பாதுகாப்பில் இருந்தால் அவர்களை காப்பாற்றுங்கள். உங்களோடு இருப்பவர்களுக்கென தனிப்பட்ட ரீதியில் மரியாதை உண்டு. நகைச்சுவை உணர்வோடு பழகினாலும் மரியாதை தரத்தவறாதீர்கள்!

3.விருந்தினராக சென்ற இடத்தில் உங்களுக்கு தரப்படும் உணவில் குறை கண்டு பிடிக்காதீர்கள், உப்பு, புளி போன்ற விடயத்தில் அலட்டி உங்களை நீங்களே தரம் தாழ்த்தி கொள்ளவேண்டாம் நீங்கள் பணம் கொடுத்து வாங்காத எந்த தின்பண்டமாகிலும் அதன் இறுதித் துண்டுவரை சாப்பிடாமல் வாங்கியவருக்கே குடுத்து விடுங்கள்.

4.வியாபாரம் தொடர்பிலோ அல்லது வேறு எந்த விடயத்திலுமோ நடைபெறும் பேச்சுவார்த்தையின் போது அதை செய்கிறேன் இதனை உங்களுக்கு தருகிறேன் என முதலாவது வாக்கு தராதீர்கள், பின்நாளில் நீங்கள் நஸ்டமடைய அதுவே காரணமாகும்.

5.நீங்கள் செய்யாத வேலையின் பெறுமதியைத் திருடாதீர்கள், யார் செய்தார்களோ அவர்களுக்கே அதன் பாராட்டு கிடைத்தாக வேண்டும்.

6.எவ்வேளையிலும் வீண்பழிக்கு உட்படாதீர்கள், உரிய தரப்பிடம் நேரடியாகச் சென்று உங்கள் நேர்மையை காட்டத் தவறாதீர்கள் வீண்பழி சுமத்துவோரிடம் அமைதியாக இருந்தாலும் மேலிடத்தில் இருப்பவரிடம் உங்கள்மீது நல்லெண்ணம் இருக்கும்படி பார்த்துகொள்ளுங்கள். நேர்மை அதற்கு உதவும்.

7.உரியவரால் நீங்கள் அழைக்கப்படாத விருந்துக்கு யார் அழைத்தாலும் செல்லாதீர்கள். நண்பர்களிடம் இந்த விடயத்தில் கடுமை காட்டினாலும் பரவாயில்லை.

8.கண்களைப் பார்த்தே பேசுங்கள், உறவுக்காக கெஞ்சாதீர்கள், அது எப்படியான உறவாக இருந்தாலும் சரி உங்கள் மேல் இல்லாத தவறுக்காக மன்னிப்பு கோராதீர்கள், ஒருதரம் நீங்கள் பிழை செய்யாமல் கேட்கும் மன்னிப்பு காலம் முழுதும் உங்களை அவர்களிடம் கெஞ்சவைத்து உங்கள் தன்மானத்தை இழக்கச் செய்யும்.

9.யாரேனும் உங்களுக்கு வாழ்க்கை தந்ததாக நினைத்துகொள்ளாதீர்கள். மிக முக்கியமான உறவொன்றின் மூலம் கிடைக்கும் எதற்கும் நன்றியுணர்வோடு இருங்கள். அதை தவிர்த்து அவர்கள் இழந்துவிட்டால் உங்கள் வாழ்க்கை என்னவாகும் என்று நினைத்து உங்களை நீங்களே தாழ்த்திகொள்ளாதீர்கள்! ஆக சிறந்த படைப்பு நீங்கள் தான்,

- சர்மிலன் -

# கனி தரு மரங்கள் நடுவோம்.



(நிருபர்.K.கமல்ராஜ்). நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அம்மணி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செயலகத்தில் பயனற்று தரிசு நிலமாகக் கிடந்த பிரதேச வளாகம் பண்படுத்தப்பட்டு TJC வர்க்க மா மரக் கன்றுகள், Dragon பழ மரக்கன்றுகள் மற்றும் தேசிமரக் கன்றுகள் நடுவதற்கான ஆரம்ப வேலைகள் முடிவுற்று கிடங்குகள் தோண்டப்பட்டு கன்றுகள் நடுகை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் அலுவலக முன்வளாக அபிவிருத்தி நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. T.கிருபைராஜா அவர்களால் பொறுப்பேற்க்கப்பட்டதுடன் அலுவலக பின்வளாக அபிவிருத்தி வேலைகள் கணக்காளர் றிஸ்வி யஹ்ஸர் அவர்களாலும் பொறுப்பேற்கப்பட்டு தொடர் கண்காணிப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தில் காணப்பட்ட தரிசு நிலங்கள் பயனுள்ளதாக மாற்றியமைக்கப்படுவது நாவிதன்வெளிப் பிரதேச அபிவிருத்தியின் உச்சகட்டமாகும்.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் நோக்கம் யாதெனில்; தற்போது தரிசாகக் காணப்பட்ட நாவிதன்வெளிப் பிரதேச செயலக வளவானது; தனது காணிப்பயன்பாட்டினை அர்த்தமுள்ளதாக மாற்றியமைத்ததோடு, இதுபோன்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள காணிகளையும், மாற்றியமைப்பதற்கான ஒரு மாறுபட்ட சிந்தனை மக்கள் மத்தியில் உருவாக வேண்டும் என்பதாகும்.

# பால் உற்பத்தியில் ஓர் மறுமலர்ச்சி.




நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு, 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் ஒன்றிணைத்ததான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கால்நடைப் பண்ணையாளர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, ஆடைஉழ ஊடாக பால் சந்தைப் படுத்தப் படுகின்றது.

சவளக்கடை கிராமப் பிரிவில் பாவனையற்றுக் கிடந்த கட்டடம் ஒன்றினை பால் சேகரிப்பு நிலையமாகப் பயன்படுத்துவதற்கு ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனூடாகப் பால் உற்பத்தியில்ஈடுபடும் கால்நடைப் பண்ணையாளர்களின் பால் சந்தைப் படுத்தலானது, ஒருமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன், படிப்படியான முன்னேற்றத்தையும் கண்டு வருகின்றது.

இச் செயற்பாடு முன்னர் எப்போதும் இல்லாத அளவில், Milco நிறுவனம் கொள்வனவு செய்து கொண்டிருப்பது ஒரு முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

# தொழில் முயற்சியில் ஈடுபடும் வாடிக்கையாளர்களுக்கு சமுர்த்தி வங்கியின் அளப்பரிய கடன் சேவை

இலங்கை வங்கித்துறையில் மூன்று தசாப்த காலங்களை அண்மித்த ஆற்றலையும், அனுபவங்களையும் கொண்ட நுண்நிதித் துறையின் முன்னோடியாக திகழும் சமுர்த்தி வங்கியானது குறைந்த வருமானம் பெறும் மக்கள் மத்தியில் சேமிப்பு கலாசாரத்தை பழக்கப்படுத்தி அவர்களை கிராமத்தின் அநியாய வட்டிக்காரர்களின் பிடியில் இருந்து மீட்டெடுத்து மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தி மக்களை வெற்றியடையச் செய்து தானும் வெற்றியடைவதையே தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் தொழில் முயற்சிக்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கி அவர்களின் துறைகளில் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக வாழ்வாதாரத்தை உயர்த்தி வறுமையிலிருந்து மீட்டெடுப்பதற்கான தளம் ஒன்றினை அமைத்துள்ளது. வாடிக்கையாளர்கள் தங்களின் தொழில் முயற்சிக்கான கடனைப் பெற்றுக் கொள்வதற்கு வங்கியில் அங்கத்துவத்தினைப் பெறல் வேண்டும். அதன் பின்னர் 3 மாதங்கள் காத்திருக்க வேண்டும். இக்கால எல்லை தற்போது 2 வாரங்களாக குறைக்கப்பட்டு இலகுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் வாடிக்கையாளர்களுக்கு துரித சேவையினை வழங்கும் பொருட்டு சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

| தொ இல | கடன் வகை | வட்டி வீதம் | உயர்ந்த பட்ச கடன் தொகை | திருப்பிச் செலுத்தும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | வாழ்வாதார அபிவிருத்தி கடன் | 14% | 1000000.00 | 72 மாதங்கள் |
| 2 | விவசாயக் கடன் | 14% | 500000.00 | 72 மாதங்கள் |
| 3 | வாழ்வாதார சுழற்சிக் கடன் | 10% | 100000.00 | 60 மாதங்கள் |
| 4 | புதிய தொழில்முயற்சி அபிவிருத்திக் கடன் | 15% | 1000000.00 | 96 மாதங்கள் |
| 5 | வீட்டுக் கடன் | 15% | 300000.00 | 60 மாதங்கள் |
| 6 | நுகர்வுக் கடன் | 15% | 25000.00 | 18 மாதங்கள் |
| 7 | இடர் கடன் | 15% | 25000.00 | 18 மாதங்கள் |
| 8 | யொவுன் திரிய கடன் | 15% | 500000.00 | 60 மாதங்கள் |
| 9 | யொவுன் திரிய தொழில் முயற்சிக் கடன் | 15% | 500000.00 | 60 மாதங்கள் |
| 10 | சமுர்த்தி அருணலு கடன் | 15% | 300000.00 | 36 மாதங்கள் |
| 11 | சமுர்த்தி மித்துறு கடன் (Daily Collecetions) | 15% | 200000.00 | 12 மாதங்கள் |
| 12 | சமுர்த்தி இசுறு கடன் | 15% | 1000000.00 | 84 மாதங்கள் |
| 13 | சமுர்த்தி ஆலோக கடன் | 15% | 20000.00 | 36 மாதங்கள் |
| 14 | சௌபாக்கியா ரண்பத கடன் | 17% | 500000.00 | 60 மாதங்கள் |

இக்கடன் சேவைகளின் ஊடாக இதுவரை பயனடைந்த பயனாளிகள் - 17,616, பேர்கள், வழங்கப்பட்டிருந்த கடன் தொகை 356,339,487.00, தற்போது நன்மை அனுபவித்துவரும் பயனாளிகள் - 3,505 பேர்கள், வழங்கப்பட்டிருக்கும் கடன் தொகை- 56,174,813.00. இவ்வாறு சமுர்த்தி வங்கி ஊடாக தமது தொழில் முயற்சியில் முன்னேறியுள்ள வாடிக்கையாளர்கள் அதனைச் சொல்லி நன்றி கூர்வதில்லை. ஏனைய நலன்புரி நன்மைகள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சம் அவர்களை மௌனிக்க வைக்கிறது. என்றாலும் தமது சுயமுயற்சியால் முன்னேற்றம் காண ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கான கடன்களை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த சமுர்த்தி வங்கி என்றும் காத்துநிற்கிறது.

எம்.ஐ. இஸ்ஹாக்
அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர்.

# காசாவில் பட்டினி ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது

- ஐரோப்பிய ஒன்றியம்-

காசாவில் பட்டினி ஒரு போர் ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கைத் தலைவர் தெரிவித்துள்ளார். காசாவிற்குள் போதியளவு மனிதாபிமானப் பொருள்கள் செல்லமுடியாமல் உள்ளதை மனிதர்கள் ஏற்படுத்திய பேரழிவு என ஜோசப் பொரோல் வர்ணித்துள்ளார்.

போதிய தரைப் பாதைகள் இல்லாததே காசாவில் உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடிக்கான காரணம் என ஐ.நாவில் உரையாற்றுகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தற்போது தங்களது உயிர் வாழ்வதற்காக போராடுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். காசாவிற்குள் மனிதபிமான உதவிகள் செல்லவேண்டும், ஐரோப்பிய ஒன்றியம் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இது மனிதனால் உருவான நிலமை. கடல் மற்றும் வான்வெளி மூலம் விநியோகங்களை மேற்கொள்வதற்கான மாற்று வழிகளை ஆராய்ந்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். வீதிவழியாக மனிதபிமான உதவிகளை வழங்கும் நடவடிக்கைகள் செயற்கையாக முடக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

பட்டினி என்பது போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. உக்ரையினில் இது இடம்பெறும் போது கண்டிக்கும் நாங்கள் காசாவிலும் அதே வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரஸ்யா குறித்த பயம், பிரான்சுடன் கைகோர்க்கும் நாடு



உக்ரைன் மீது ரஸ்யா போர் தொடுத்த விடயம் பல நாடுகளுக்கு அச்சத்தை உருவாக்கியுள்ளது. ஆகவே, ஒருவேளை நம்மையும் ரஸ்யா தாக்கினால் என்ன செய்வது என யோசிக்கத் துவங்கியுள்ளன சில நாடுகள். ரஸ்யா குறித்த அச்சம் காரணமாக, பிரான்சுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள இருக்கிறது மால்டோவா நாடு. பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இரு நாடுகளும் கையெழுத்திட இருப்பதாக சமீபத்தில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

உக்ரைனை ஒட்டி அமைந்துள்ள மால்டோவா ஒரு சிறிய ராணுவத்தைக் கொண்ட நாடாகும். நீண்டகாலமாக ரஸ்யாவுடன் பதற்றமான உறவு நீடிக்கும் நிலையில், ரஸ்யா உக்ரைன் போரில் மால்டோவா உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளதால் தற்போது பதற்றம் அதிகரித்துள்ளது. Transdniestria என்னும் பகுதியில் ரஸ்யா படைகளை முகாமிட்டுள்ளமை, அந்நாட்டுக்கு கூடுதல் அச்சத்தை உருவாக்கியுள்ளது. ஆகவே பிரான்ஸ் ஜனாதிபதியான இமானுவல் மேக்ரானும், மால்டோவா ஜனாதிபதியான Maiasandu வும் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட இருப்பதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பி.ரூபன்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

# தாய்மை (சிறுகதை)

ஒரு கிராமத்தில் ஒரு தம்பதியினர் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒருகண் பார்வை இழந்த ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சிறிது காலத்தில் தந்தை மரணித்து விட்டார். தனது உதிரத்தைப் பாலாகக் கொடுத்து தனது குழந்தையை வளர்த்து வந்த தாய் முற்றிலுமாக தன்னை குழந்தைக்காகவே அர்ப்பணித்தாள். தன் மகனைச் சமூகத்தில் சிறந்தவனாக வளர்க்க வேண்டுமென நினைத்தாள்.

ஒரு சிலவருடங்கள் கழிந்தன,. பாடசாலைக்குச் செல்லும் பருவமும் நெருங்கியது உரிய வேளையில் தனது மகனைப் பாடசாலைக்கு முதல் நாள் அனுப்பி வைத்தாள். அந்தக்கணமிருந்து மகனை வீட்டிற்குஅழைத்து வருவதற் கான நேரத்தை எண்ணிக் கொண்டிருந் தாள். உரிய நேரத்திற்கு முன்கூட்டியே பாடசாலைக்கு விரைந்து பிரதான நுழைவாயில் அருகில் சென்று வழிமேல் விழிவைத்து தன் மகன் வருகையைக் கண்டுஓடிச் சென்று அரவணைத்துக் கொண்டுமுத்தமிட்டு அவனை நடக்க விடாது தூக்கியவாறே தன் வீட்டுக்கு விரைவாள். இப்படியாக வருடங்கள் சில கடந்து சென்றன. ஒருநாள் வழமை போல் பாடசாலை விடும் நேரம் நெருங்கியதும் மகனை அழைத்து வரச் சென்றாள். அன்று அவளுக்கு ஓர் அதிர்ச்சிச் செய்தி காத்திருந்தது. சற்றுத் தாமதமாகவே வகுப்பறையிலிருந்து மகன் வெளியேறி வந்தான் தாயைக் கண்ட அவன் “அம்மா என்னை அழைத்துச் செல்வதற்கு இனி நீங்கள் வரவேண்டாம். எனது நண்பர்கள் எல்லாம் குருடியின் மகன் என்று என்னை கேலி செய்கின்றனர்” எனச் சொன்ன வார்த்தை அவளுக்கு அம்பு பாய்ந்தது போல் மனதைக் காயமாக்கினாலும், காட்டிக் கொள்ளாமல் தனது மனதில் புதைத்தபடி மகனை வீட்டிற்கு அழைத்துச்சென்றாள்.

சிறிது காலம் சென்றதும் சற்றுத் தொலை விலுள்ள கல்லூரி ஒன்றில் தங்கி மகன் உயர்படிப்பைத் தொடர்ந்தான். தனது ஒரேயொரு மகனைக் காணாமல் பலநாட்களாக ஏங்கிக் கொண்டிருந்தாள். ஒருநாள் காலை திடீரெனப் புறப்பட்டு மகனது கல்லூரிக்குச் சென்று, தான் வந்த செய்தியை காவலாளியிடம் தெரிவித்து விட்டு மகனை ஆசையாகக் காண்பதற் காக தாய்க்கு, அங்கு விரைந்து வந்த மகனால் கொடுக்கப்பட்ட பரிசு, வார்த் தைகளால் சொல்ல முடியாத வலியாக இருந்தது. அன்று நண்பர்கள் தன்னைக் குருடியின் மகன் என்று கேலி செய்கிறார்கள் என்று சொன்ன மகன் இன்று அவனே தனது தாயை “நீ குருடி என்றும் தன்னைப் பார்க்க இங்கு வரவேண்டாம்” என்றும் சொல்லி, தாயை விரட்டிவிட்டான். நீண்ட நாட்களாகப் பார்க்கவில்லை என்ற ஏக்கத்துடன் வந்த தாய்க்கு மகனது அவ்வார்த்தைகள் வெந்தபுண்ணில் வேலைப் பாய்ச்சியது. கண்களில் கண்ணீருடன் அவ்விடத்தை விட்டு அகன்றாள்

சில நாட்கள் கடந்தபின் தாயிடமிருந்து மகனுக்கு ஒரு தந்தி வந்தது. “நான் நோயுற்றிருக்கிறேன். கடைசியாக ஒரு தடவை என்னைப் பார்த்து விட்டு செல்” என்று அதில் எழுதப்பட் டிருந்தது. மகனோ மனம் நெகிழ்ந்து தாயைப் பார்க்க வந்தான். அப்போது தாய் இயற்கை எய்திய செய்தியே அவனது காதில் கேட்டது. அங்கிருந்த உறவினர்கள் “நீ வந்தால் இந்த கடிதத்தை கொடுக்கும்படி உன் தாய் சொல்லி விட்டு மரணித்தாள்” என்று கூறிக் கடிதத்தைக் கொடுத்தனர். கையில் வாங்கிய அதேகணம் அவசர அவசரமாகக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான். “மகனே நீ என்னைக் குருடி என்று கூறினாயே அது எனக்கு வருத்தமில்லை. அது உண்மையுமல்ல. ஆனால் நீ அந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே இக் காகிதத்தை எழுதினேன். நீ பிறக்கும் போது ஒருகண் பார்வை இழந்துதான் பிறந்திருந்தாய், என்மகனை எவரும் “குருடன்” என்று சொல்லக்கூடாது என்பதற்காக எனது கண் ஒன்றை உனக்குக் கொடுத்து வெளிச்சம் தந்தேன் மகனே” என்று அதில் எழுதப்பட் டிருந்தது. இதைப்படித்தபின் மகன் மனமுடைந்தான். பாசத்தைக் காட்ட தாய் உயிருடன் இல்லையே என தேம்பி தேம்பி அழுதான்.

(பெற்றோருடன் அன்பாகவும் பாசமாகவும் பணிவாகவும் பழகுவதுகடமையல்ல அது எமது ஒவ்வொருவரினதும் கடன்.)

-----------------------------

எம்.எச்.எம்.சாதிக்
பிரதேச செயலகம், - நாவிதன்வெளி

## “மர்மக்கிராமம்”
(மர்மத் தொடர்...)

விரர்பதி - அருள் மல்லிகா

(கடந்தமாத இதழின் தொடர்ச்சி...........)

யாரது என்று கேட்டார். “ஐயா... ஐயா...........காமன்சிக்குப் போன என்ட மகளை இன்னும் காணல்ல ஐயா. வழக்கமா நேரத்தோடு வந்திடுவாள், ஆனா இன்று இன்னும் வரக்காணல்ல, இருட்டுப் பட்டுத்து ஐயா, எனக்குப்பயமா இருக்குது, தகப்பனும் இல்லாம கஷ்ரப்பட்டு வளத்த என்ட ஒரே ஒரு குமருப்புள்ளைக்கு ஏதும் நடந்ததோ தெரியல்ல ஐயா, கொஞ்சம் நீங்கதான் பார்த்து சொல்லனும் ஐயா...” என அழுது புலம்பினாள் கண்ணம்மா. அவளது புலம்பலைக் கண்டு மனம் இரங்கிய நல்லதம்பி தனது மனைவி காமாட்சியை அழைத்து “காமாட்சி அந்த ரோச்லைட்ட எடுத்துட்டுவா, வந்து கண்ணம்மாவை உள்ளே கூப்பிட்டு குடிக்க ஏதாச்சும் கொடுநான் நம்மட சன்முகத்தையும் கூட்டிற்றுப்போய் ஊர் எல்லைவரை கண்ணம்மாவின் மகளை பாத்திட்டு வாரன்” என கையில் ரோச் லைட்டுடன் வெளியேறினார் நல்லதம்பி. சண்முகத்திடமும் நடந்ததை கூறி அவனை யும் அழைத்துக் கொண்டு இருவரும் ஊர் எல்லையை நோக்கி நடக்கலானர். நட்சத்திரங்களும், முழு நிலவுமற்ற வானம் காரிருள் மயமாக விருந்தது, நடக்கும் பாதை தெரிய ரோச் லைட் வெளிச்சம் மட்டுமே. சில்வண்டுகளின் ஓசை ஒருவிதமான பயத்தை ஏற்படுத்தியது. இருமருங்கும் நெருங்கிப் பிடிக்கும் பூதங்கள் போல் படர்ந்த முள்மரங்கள், நிசப்தமான அந்த இருளில் ஏதோ ஒரு இனம் புரியாத பயத்துடன் நடந்த இருவரும் ஒரு வழியாக ஊர் எல்லையை அண்மித்ததும் ஊரின் எல்லையில் உள்ள எல்லையம்மன் ஆலய விளக்கொளி சற்று மங்கலாக மின்னித் தெரிந்தது. அப்போது சண்முகம் “இதோ எல்லையம்மன் கோயில் வந்திட்டு இதுக்கு மேல எங்க போய் பார்க்கிற” என்று கூறி நிற்க நல்லதம்பியும் அவ்எல்லையம்மன் கோயில் வாயிலை அடைந்ததும் தனது ரோச் லைற்றை சுற்று முற்றும் அடித்துப் பார்க்கலானார். யாரும் வந்த சிலமனில்லை. சரி காலையில போய் காமன்சியில விசாரிப்பம் என்று கூறித் திரும்புகையில் திடீரென சற்று தூரத்தே “ம்......ம்..... ஐயோ.........” என்ற ஒரு பெண்ணின் மரண அலறல் கேட்டது. திடுக்கிட்டவாறே திரும்பி ரோச் லைட் வெளிச்சத்தை அடிக்க கறுத்த உருவமொன்று தூரத்தே நகர்ந்து செல்வதை இருவரும் கண்டனர். இருட்டில் அது சரியாக தெரியவில்லை. “யாரது...யாரது...”என இருவரும் சத்தம் கேட்ட திசையை நோக்கி ஓட திடீரென....

(தொடரும்...)

## சர்வதேச மகளிர்...

திரு. கி. யோகேஸ்வரன், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம், மேலதிக மாவட்ட பதிவாளர் திரு. பு. நித்தியானந்தன், சமுர்த்தி சங்க வங்கிச்சங்க முகாமையாளர் ஆகியோரும், சகல பிரிவுகளினதும் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் மதிப்பிற்குரிய நாவிதன்வெளி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் ஒரு மாறுபட்ட சிந்தனையுடன், பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்வது பெண்களா? ஆண்களா? என்ற தலைப்பில் பட்டிமன்ற நிகழ்வும், Management games என்பனவும் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றதுடன், மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரினால் பெண் உத்தியோகத்தர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் மூலம் மகளிர்தின சிந்தனை தெரிவிக்கப்பட்டமையும் பாராட்டத்தக்கது. இந்நிகழ்விற்கு Deaf link அமைப்பு மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவு, கிராம அபிவிருத்தி பிரிவு என்பனவும் உதவிகளை வழங்கியிருந்தன.

## உபகரகணங்கள் வழங்கும்...

நூல் வழங்கல் மற்றும் சாளம்பைக் கேணி -04 கிராம அலுவலர்பிரிவில் நெசவு உற்பத்தியினை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கான நூல் வழங்கும் நிகழ்வு என்பன உதவிப் பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன் அவர்களின் தலைமையில் 2024.03.15 ஆந் திகதியன்று பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலக பணிப்பாளர் திருமதி. அனுராதி பெரேரா, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. வே. ஜெகதீசன், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான பொருட்களை வழங்கி வைத்தனர்.

## விற்பனைக்கூடம்...

1990, 2000 ஆம் ஆண்டுகளில் பிரசித்தி பெற்றிருந்த இச்சந்தை அண்மைய காலங்களில் கைவிடப்பட்டிருந்தமையால் இப்பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் இன்று பிரதேச செயலாளர் மற்றும் பிரதித்திட்டமிடல் பணிப்பாளரினால் புத்துயிர் அளிக்கப்பட்டு வரும் சனிக்கிழமை முதல் வாராந்த சந்தையாக தொடர்ச்சியாக இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதை அப்பிரதேச வியாபாரிகளும் பிரதேச மக்களும் வெகுவாக பாராட்டினர்.

மேற்படி நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் மதிப்பிற்குரிய ஆர்.ராகுலநாயகி மற்றும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. ரி.கிருபைராஜா அவர்களினால் ஆரம்பம் செய்யப்பட்டது. மேற்படி நிகழ்வில் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம செயலாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

## சிவராத்திரி நிகழ்வு...

இந்நிகழ்வுகள் வாணி அறநெறிப் பாடசாலை (மத்தியமுகாம்-01), சைவமறுமலர்ச்சி சரஸ்வதி அறநெறிப் பாடசாலை, சிறி முருகன் அறநெறிப் பாடசாலை (மத்தியமுகாம்-02), வேப்பையடி பிள்ளையார் அறநெறிப் பாடசாலை , நாவலடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை (அன்னமலை 02), விளாவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை (நாவிதன்வெளி-02), திரு முருகன் அறநெறிப் பாடசாலை (நாவிதன்வெளி 1) ஆகிய இடங்களில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கு பற்றலுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மேலும், சைவ சமயச் சிந்தனைகள், கருத்துகள், மற்றும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு சிறந்த திட்டமாக இவ் ஆக்கத்திறன் போட்டி நிகழ்வுகள் அமையப் பெற்றிருந்தன.

# இந்து சமய வழிபாட்டில் உளவியல்

Y.ஜசோப்பிரியன்

**கடந்த மாத இதழின் தொடர்ச்சி...**

இறை நம்பிக்கை உள்ள நாம் அனைவரும் ஆலயங்கள் செல்வது, சுவாமி தரிசனம் செய்வது, வேண்டுதல்களை நிறைவேற்றுவது, என வழிபாடுகளை மேற்கொண்டே வருகின்றோம். அவ்வழிபாட்டை முறையாகச் சரியாக கடைப்பிடிக்க வேண்டும் என்பது ஆன்றோர்கள் வாக்காகும். ஆலய வழிபாடானது தனித்தே வழிபாடு மட்டுமன்றி அறிவியல் நோக்கிலும் நோக்கத்தக்கது. அந்த வகையில் ஆலய வழிபாடானது உளவியல் ரீதியில் பல்வேறு நன்மையினை அளிக்கின்றது. மனிதன் மனிதனாக வாழ்வதற்காக அவனை நெறிப்படுத்துவதற்காக மனிதனால் அமைக்கப்பெற்ற ஒழுக்க சீலங்களே "மதங்களும், மத வழிபாட்டுத்தலங்களும்" இதை எந்த ஒரு புத்திஜீவிகளும் மறுப்பதற்கு இந்துமதத்தின், மதவழிபாட்டுத் தலங்களாக இருக்கின்ற ஆலயங்கள் எவ்வளவுதூரம் மக்களை ஆலய வழிபாட்டுக்காக இழுத்துக்கொள்கின்றது என்பதை உளவியல் ரீதியான கண்ணோட்டத்தில் நோக்குவதன்மூலம் அறியலாம். இவ்வாலயங்கள் ஆகமம் சார்ந்தும், ஆகமம் சாராமலும் வழிபாடுகள் நடைபெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தில் வழங்கப்படுகின்ற பிரசாதமானது சைவ உணவாகும். அத்துடன் இவை உடலிற்குக் குளிர்மையை ஏற்படுத்தும் உணவுகளாகவும் காணப்படுகின்றன. இதனால் மனதில் சாத்வீக குணம் மேலோங்குகிறது. அத்துடன் மனதில் அமைதியும் சாந்தமும் என்பன ஏற்படுகின்றன. இதன் விளைவாக கோபமாக செயற்படுதலும் குறைவடைகின்றது.

தொடரும்...

# குறுக்கெழுத்துப் போட்டி இல.02 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | ல் | 2 லா | ■ | 3 ம | ரு | ந் | 4 து |
| ரு | ■ | 5 க | ல் | ட | ■ | ■ | டு |
| ந் | ■ | ட் | ■ | 6 ம் | க | ப | ப் |
| 7 து | 8 ப | டா | 9 ப் | ட் | ■ | ■ | பு |
| ■ | டி | ■ | கு | ■ | 10 நீ | தி | ■ |
| 11 க | ப் | அ | பை | ■ | ச் | ■ | 12 இ |
| 13 ள் | பு | ■ | ■ | ■ | 14 ச | த | ம் |
| ளி | ■ | 15 எ | ச் | சி | ல் | ■ | மி |

## வெற்றியீட்டியவர்கள்

1ஆம் பரிசு
J.F.மிர்பா
மருதமுனை.

2ஆம் பரிசு
NM.M.A.சுஜான்
சம்மாந்துறை

3ஆம் பரிசு
S.சிவராசா
ஆறுமுகத்தான் குடியிருப்பு-02

பாராட்டு பெறுபவர்: நா.தொஸ்யந்தன்
நாவிதன்வெளி

## குறுக்கெழுத்துப் போட்டி இல.03

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 | |
| | ■ | | ■ | 5 | | | ■ |
| 6 | 7 | | 8 | ■ | ■ | 9 | |
| 10 | | ■ | 11 | | 12 | | ■ |
| ■ | 13 | 14 | | ■ | | ■ | 15 |
| 16 | ■ | | ■ | ■ | 17 | | |
| 18 | 19 | ■ | 20 | 21 | | ■ | |
| ■ | 22 | | ■ | | ■ | 23 | |

**இடமிருந்து வலம்.**

*01. பாட்டுகளில் இதுவும் ஒன்று.*
*03. இரவும் இதுவும் மாறிமாறி வரும்.*
*05. எண்சாண் உடம்பிற்கு இதுவே பிரதானம். (குழம்பி)*
*06. அறுக்க தேவையான பொருள்.*
*09. இதுவும் பெய்யும்.*
*10. போதைதருவது. (திரும்பி)*
*11. பெறுமதி கூடினாலும் இதனை வாங்காமல் இருக்கமாட்டார்கள்.*
*13. ஒரு ராகம்.*
*17. தங்கைகளுக்கு பிடித்த உறவு. (திரும்பி)*
*18. பலவகை மரங்கள் செறிந்துள்ள இடம். (திரும்பி)*
*20. ஒரு காலத்தில் இதுவும் ஒரு தலைநகரம் தான்.*
*22. இதைக் கொடுத்தாலும் சிலர் வாக்குத் தவறமாட்டார்கள். (திரும்பி)*
*23. இசைக்கு இதுவும் தேவை.*

**மேலிருந்து கீழ்**

*01. இதனை நிலைத்திணை என்பர்.*
*02. சேலையில் ஒருவகை. (குழம்பி)*
*03. இது வந்தால் பத்தும் பறந்து விடுமாம்.*
*04. கொடி நாட்ட இது தேவை.*
*07. அழகிகளில் ஒருவர். (குழம்பி)*
*08. பல்வேறு வகைகளைச் சொல்லலாம். (தலைகீழ்)*
*12. நம்மை நாமே பார்க்க உதவுவது.*
*14. துப்பாக்கி இருந்தால் இதுவும் தேவை.*
*15. பெண்களில் ஒருவகை. (குழம்பி)*
*16. தேடித்திரிவதை இது வீசுவதாக சொல்வர்.*
*19. அநேகமான பொருள்கள் இப்படித்தான் விற்பனையாகும்.*
*21. இது உள்ளாறும் என்கிறார் திருவள்ளுவர். (தலைகீழ்)*

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.04.15 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்

**முதலாம் பரிசு :** 200/=
**இரண்டாம் பரிசு :** 150/=
**மூன்றாம் பரிசு :**100/=

# நாட்டின் முதுகெலும்பு விவசாயம்



ஏ.என்.எம்.ஹம்னா
அல்-ஸிராஜ் மஹா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)
யுனிக் சில்ரன் கிளப், சாளம்பைக்கேணி - 04

உணவு இல்லையென்றால் மனிதனால் உயிர் வாழ முடியாது. விவசாயி சேற்றிலே கால் வைத்தால்தான், நாம் சோற்றிலே கை வைக்க முடியும். உலகத்தில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் எல்லோருக்கும் உணவளிக்கும் மேன்மையான தொழிலாக விவசாயம் உள்ளது.

விவசாயம் உலகின் மிகப்பழமையான தொழில்களில் ஒன்றாகும். வேளாண்மை என்பது மக்களின் வாழ்க்கைத்தரம், அதன் நல்வாழ்வு மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பை நிர்ணயிக்கும் மிக முக்கியமான தொழிலாகும்.

இயற்கை விவசாயம் என்பது செயற்கை உரம், பூச்சிகொல்லி, மரபணு மாற்றப்பட்ட கழிவுகளை முற்றிலுமாக தவிர்த்து பயிர்சுழற்சி, பசு உரம், உக்கிய குப்பை ஆகியவற்றை உரமாக பயன்படுத்துதலாகும்.

இயற்கை விவசாயத்தின் மூலம் துாய்மையான ஆரோக்கியமான பயிர்களைப் பெறலாம். பஞ்ச பூதங்களையும் பாதிக்காமல் இயற்கை முறையில் வேளாண்மை செய்யலாம். மேலும் விவசாயச் செலவு குறைந்து, உற்பத்தி மற்றும் இலாபம் அதிகரிக்கும். பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்க முடியும்.

நவீன உலகத்தில் அனைவரும் வேகமான வாழ்க்கைதான் வாழ்ந்து வருகின்றார். விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மரபணு மாற்றப்பட்ட விதை, உரம், பூச்சி மருந்து, புதிய விவசாய உபகரணங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி அதிக உற்பத்திகள் செய்யப்படுகின்றன. எனினும் விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்ற நவீன கிருமிநாசினிகள் உணவை நஞ்சாக்குகின்றன.

ஏராளமான நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. நம் முன்னோர்கள் விவசாயத்தை கௌரவ தொழிலாக செய்து வந்துள்ளனர். இத்தகைய உழவுத் தொழிலை நாம் மதிக்க வேண்டும். உழவன் கணக்குப் பார்த்தான் என்றால், உலகத்து உயிர்கள் அதாவது மனிதன் உட்பட ஒன்று கூட மிஞ்சாது என்பது புதுமொழி. இத்தகைய உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்.

“விவசாயம் தொழிலல்ல உயிரின் ஆதாயம்”

கல்வியே ஆன்மாவின் உணவு, அஃதின்றேல் நம் சக்திகள் எல்லாம் ஸ்தம்பித்து நின்று விடும், பயன்தரா.

- மாஜினி

கல்வி என்பது தெரியாததை தெரியச் செய்வதன்று ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதே ஆகும்.

- ரஸ்கின்

# கல்விப் பொது தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குப் பின் மாணவர்களின் அடுத்த கட்ட நகர்வு ...

சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலோடு தங்களது 13 வருட பாடசாலை வாழ்க்கையினை சிறந்த மாணவர்களாக நிறைவு செய்யும் ஒரு கட்டமாகவே கல்வி பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை அமைந்து விடுகின்றது. பரீட்சைக்குத் தோற்றியதன் பிற்பாடு அவர்களின் சூழல் மற்றும் மனோநிலை என்பன சிலவேளைகளில் அவர்களை தடம்புரள வைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் கண்டிருக்கின்றோம். இவ்வாறான உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வென்று அவர்கள் அடுத்த கட்ட நகர்வுக்குச் செல்வதில் மாணவர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டல் மிக அவசியமாகின்றது. இவ் வழிகாட்டலே அவர்களின் சிறந்த எதிர் காலப் பயணத்திற்கு வித்திடுகின்றது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அவர்களுடைய பெறுபேற்றின் போது, ஒன்றில் அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெறலாம் அல்லது தவற விடலாம். வாய்ப்பைப் பெற்றவர்கள் போன்றே தவற விட்டவர்களும் ஒரு நிபுணராக ஆவதற்கான பட்டம் மற்றும் டிப்ளோமா தொழிற் கற்கை நெறியொன்றை தொடர்வதற்கான பல வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறான வழிகாட்டல்களை நாம் அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டியது எமது கடமையாகும்.

பல்கலைக்கழகம் செல்வதற்காக அவர்கள் பயின்ற பாடப் பிரிவின் ணு பெறுமதிக்கேற்ப பட்டப்பாட நெறியை பல்கலைக்கழகங்களில் மேற்கொள்வதற்கும். மூன்று S சித்திகளை அல்லது அதற்குமேல் பெற்றவர்கள் பல்வேறு துறைகளில் 125 பட்டப் பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கும், பல்கலைக்கழக நுழைவுக்கு போதுமான பெறுபேறு கிடைக்காத போதிலும் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி லுநள கிடைத்தவர்களும் பட்டம், டிப்ளோமா மற்றும் தொழில் கற்கையொன்றை பயில்வதற்காக,

- # இலங்கையில் 14 அரச பல்கலைக்கழகங்கள்
- # 4 அரச பல்கலைகழக நிறுவனங்கள்
- # 3 பல்கலைக்கழக வளாகங்கள்
- # ஒரு பல்கலைக்கழக அகடமியும் உள்ளன.

இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு கல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக பட்டப்படிப்பு பாடநெறிகளுடன் தனியார் கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இயங்கி வருகின்றன. அப்பட்டநெறிகளை பயில்வதற்காக அரச கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் உள்ளன. இது தவிர உயர்தர பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும், தங்களது ஆற்றல் விருப்பத்திற்கு ஏற்ப தொழிற் பயிற்சி ஒன்றின் மூலம் திறனாளராக மாற தேசிய தொழிற்திறன் சான்றிதழ் (NVQ) ஒன்றை பின்வரும் நிறுவனங்கள் மூலம் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தேசிய பயிலுநர், மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை (NAITA)
கட்டுமான இயந்திரங்கள் பயிற்சி நிலையம் (CETRAC)
தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA)
தொழில் முறை தொழில் நுட்ப பல்கழைக்கழகம் (UNIVOTEC)
இலங்கை அச்சு பதிவு நிலையம் (SLIOV)
தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் (NYSC)
உயர் தொழில்நுட்பக் கல்வி நிலையம் (SLIATE)
இலங்கை அரசாங்கக் கைத்தொழில் பயிற்சி நிலையம் (GGTTI)

இநு நிறுவனங்களின் ஊடாக (NVQ) சான்றிதழ் பெற்றதன் பிற்பாடு (NVQ) 5, 6, 7 சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள இலங்கையில் 6 பல்கலைக்கழக கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணம், அனுராதபுரம், குளியாப்பிட்டிய, படங்கல, இரத்மலான, மாத்தளை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

எனவே, பரீட்சை பெறுபேறுகள் கிடைத்ததன் பிற்பாடு மேற்கொள்ளப்படும் இச்செயற்பாடுகள் குறித்து மனதில் வைத்துக் கொண்டு இவை தொடர்பான பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், மானிய ஆணைக்குழு தொடர்பான தகவல்களைப் பெற அதன் வலைத்தளங்கள் வழியே தேடல்களை மேற்கொள்ளுங்கள். பரீட்சை முடிவுகள் கிடைக்கும் வரை மொழி ஆற்றல்கள் மற்றும் கணினி அறிவை விருத்தி செய்யுங்கள். வார இறுதி பத்திரிகைகள், வர்த்தமானி அறிவித்தல்களை தொடராக பார்வையிடுங்கள். உங்களது திறமைகள் கல்வித் தகைமைகள் உள்ளடங்கிய ஒரு சுயவிபரக் கோவையை தயார்படுத்தி வைத்திடுங்கள், நீங்களும் ஒரு நிபுணராகலாம்.

எம்.எப்.எம்.பாஸில்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

# காணிச் சட்டங்களை புரிந்து கொள்வோம்



NMM A. Sujan, Colonization Officer,
Divisional Secretariat, Navithanveli.

காணி என்பது நம் அனைவருக்கும் பெறுமதி மிக்க சொத்தாகும். உயிருக்கு அடுத்ததாக உலகில் உள்ள அனைவரும் மதிக்கும் விடயமாக காணி என்பது உள்ளது. அவ்வாறே காணி என்பது நாளாந்தம் பெறுமதி அதிகரித்துச் செல்லும் ஒரு சொத்து ஆகும். எனவே, காணி மற்றும் அது சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களை அறிந்து கொள்வது மிகவும் பயனுள்ளதாகும். முதலாவதாக, நாம் காணி ஒன்றின் வகைகளை அறிந்து கொள்வோம்.

### தனியார் காணி

இவற்றைப் பரம்பரை வழியில் வந்த காணிகள், தனிப்பட்ட காணிகள், நிந்தஹும் என்றும் அழைப்பர். அத்துடன், விஹாரகம், தேவாலகம் காணி எனவும் காணி வகைகள் உள்ளன.

### அரசாங்கத்தின் காணி

அதாவது, இலங்கை அரசாங்கத்தின் உரித்துடைய இடமாகும். காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், மற்றும் அதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட காணி விடுப்பு கட்டளைச் சட்டம் என்பவற்றின் அடிப்படையிலேயே காணிகள் இவ்வாறு இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டன. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த சட்டத்தின் மூலம் நாட்டில் இருந்த காணிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு, மக்கள் தமது உரிமைகளை உறுதி செய்த காணிகளை தனியார் காணியாகவும், ஏனையவை அரசாங்க காணியாகவும் ஒதுக்கப்பட்டன.
காணி என்பதில் நிலம், அதற்குள் அமைந்துள்ள மரங்கள், தாவரங்கள் மற்றும் கட்டடங்கள் என்பன உள்ளடங்குகின்றன. இந்தக் கைந்நூலில் நாம் அரசாங்கத்தின் காணி தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தவுள்ளோம்.

### 1.1 காணிகளைப் பிரித்து அறிந்து கொள்வது எவ்வாறு?

இங்கு தான் எமக்கு நில அளவையாளர் திணைக்களம் மற்றும் அவர்களிடம் உள்ள நில அளவை வரைபடம் (Survey Plan) என்பன முக்கியமாகின்றன.

காணியொன்று தனியார் காணியா? அல்லது அரசாங்கத்தின் காணியா? என்பதனை சரியாக அடையாளம் காண்பதற்கு, குறித்த காணி சம்பந்தப்பட்ட வரைபடத்தினை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். நில அளவை வரைபடங்களில் அரசாங்கத்தின் காணி மற்றும் தனியார் காணி என்பன தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கும். வரைபடத்தில் ஒவ்வொரு காணி தொடர்பான தகவல்களும் தெளிவாக பட்டியலிடப்பட்டிருக்கும். காணிப்பங்குகளின் பட்டியல் அல்லது குடியிருப்பு பட்டியல் (Tenement List). ஆனாலும், சில கிராமங்களில் இந்த வரைபடம் இதுவரை தயாரிக்கப்படவில்லை.

### 1.2 அரச காணி மற்றும் தனியார் காணி என்பவற்றை எவ்வாறு பிரித்து அறிந்து கொள்வது?

மேலே விளக்கியதன் அடிப்படையில் அரசாங்கத்தின் காணி மற்றும் தனியார் காணி என்பவற்றை பிரித்து அறிந்து கொள்வதற்கு நில அளவையாளர் திணைக்களத்தின் வரைபடத்தினை பயன்படுத்தலாம். வரைபடத்தின் ஊடாக காணி அரசாங்கத்தினதா?, தனியாருடையதா? என்பதனை மாத்திரமே அறிந்து கொள்ளலாம். காணி உரிமையாளர் யார் என்பதனை அறிந்து கொள்வதற்கு சம்பந்தப்பட்ட காணி உறுதி அனுமதிபத்திரத்தினைப் பரிசோதித்துக் கண்டறியலாம்.

தனியார் காணியாயின் அதன் பொருட்டு நொத்தாரிஸினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உறுதி இருக்க வேண்டும். அந்தக்காணி உறுதி உண்மையானதா? என்பதனை 30 வருடங்களுக்கான காணியின் குடிவழிப் பதிவுகளை (Pedigree- A Diagram family history) ஆராய்வதன் மூலம் கண்டறியலாம். அதன் பொருட்டு தகுதி வாய்ந்த நொத்தாரிஸ் அல்லது சட்டத்தரணியின் உதவி அவசியமாகும். அதற்கான சட்ட ரீதியான ஆவணங்கள் காணி உரிமையாளரிடம் இருக்க வேண்டும். அத்துடன், அது மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எந்தவொரு நபரும் பதிவாளர் அலுவலகத்தில் காணி உறுதியின் வம்ச பதிவுகளைப் பரிசோதித்துப் பார்க்க முடியும். தம்மிடம் உள்ள காணி சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்தியே அதனை முன்னெடுக்க முடியும். உரிமையாளர் அல்லாத சந்தர்ப்பத்தில், சட்டத்தரணி அல்லது நொத்தாரிஸ் ஒருவரின் உதவி அவசியமாகும். வம்சப் பதிவுகளின் பிரதிகளுக்காக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் முத்திரை கட்டணத்தை வழங்க வேண்டும். அதனை தேடுவதற்கு இலகுவாக இருப்பின் ஒரேநாளில் பூர்த்தி செய்யலாம். தம்மிடம் உள்ள காணி உறுதியின் நகல் பிரதியையும் பதிவாளர் திணைக்களத்தில் முத்திரை கட்டணம் செலுத்திப் பெறலாம். ( தொடரும்...)

தகவல் மூலம் : Transparency International - SRI LANKA

# தொன்மை மிக்க வரலாற்றினைக் கொண்ட கதிர்காம முருகன் ஆலயம்

*கலாபூசணம் நவநாயகமூர்த்தி*




ஈழத்தில் பண்டைய முருக வழிபாட்டில் முதன்மை பெற்ற இடங்களில் கதிர்காமமும் ஒன்றாகும். ஈழத்தின் தென்திசையில் மாணிக்க கங்கை கரையில் இது அமைந்துள்ளது. கதிர்காமத்தின் தொடர்ச்சியான வரலாற்றினை ஈழத்தின் ஏனைய இந்து ஆலயங்களைப்போல கட்டி எழுப்புவதற்கு போதிய தடையங்கள் காணக்கிடைக்காவிட்டாலும் காணக்கிடைக்கின்ற சான்றுகள் இதன் வரலாற்றுத் தொன்மையை உணர்த்துகின்றன. கதிர்காமத் தலத்தின் மகிமை இலக்கியங்களான கந்தப்புராணம், மகேந்திர யுத்த காண்டத்திலும்,தெட்சணகைலாய புராணம், மச்சபுராணம், சுப்ரமண்யபுராணம், பராக்கிரமம் ஆகியன குறிப்பிடுகின்றன. இத்திருத்தலம் பற்றி திரிக்கோணேச்சலப்புராணம் பின்வருமாறு குறிப்பிடும்.

"கந்தவேள் குறக் கொடிதனைப் புனத்திற்
கண்டரு ஒட்டரும் கடிமணம் புணர்ந்து
வந்தவாறு மட்டாய் வரன் முறையே மகிழ்ந்து
போற்று முத்துலிங்க தேசிகர் தம்
சிந்தை அன்புறத் தெரிசனை காட்டிச்
சிறந்த நல் விளையாடல் செய்திருக்குஞ்
சுந்தரக் கதிர்காம நல் தலமும் சூழும்"

(பாடல் 36 : வரி 6-7)

இவ்வாறு கதிர்காம முருகன் ஆலயத்தின் தொன்மைச் சிறப்புக்கள் பற்றி இப்பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை கதிர்காமத் தலத் தோற்றம் பற்றியும் இவ்வாலய வரலாறு பற்றியும் தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து ஈழத்தில் திராவிடருக்கேயுரித்தான பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் (கி.மு 1000-300)கதிர்காமம் தோன்றியதென அறியமுடிகின்றது. ஆக்கால கட்டத்தில் கதிர்காமப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களும் ஈழத்தின் பூர்வீக குடியினருமான நாகர், இயக்கர், வேடர் என்ற திராவிடக் குலங்களிடையே நிலவி வந்த வேல் வழிபாட்டின்தொடர்ச்சியே பிற்காலத்தில் முருக வழிபாடாக மலர்ந்தது.

இதனை விழங்கக் கூறுமிடத்து இலங்கையில் பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் கி.மு ஏழாம் ஆறாம் நூற்றாண்டுகளில் கதிர்காமப் பகுதியில் (திசமாறகம உள்ளிட்ட) வாழ்ந்து வந்த திராவிடரிடையே நிலவிவந்த வேல்வணக்கம் என்ற உருவவழிபாடே பிற்காலத்தில் கதிர்காமத்தில் முருக வழிபாடாகவும் (முருகன் ஆலயம்) வேல்வழிபாடாகவும்(கதிரமலை) விளங்கிவந்தன.

பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். ஈழத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்களில் கதிர்காமம் உள்ளிட்ட திசமாறகம பிரதேசமும் அடங்கும். (ஈழத்து இந்து சமய வரலாறு பக்: 36 பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் -1996) கதிர்காமம், திசமாறகம ஆகியன பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களாகும்.

தோன்மை மிக்க வரலாற்றினைக்கொண்ட கதிர்காம முருகன் ஆலயம்

- தொடரும்... -

## தொடர்ந்து ஒருவாரம் மாதுளம் பழம் சாப்பிட்டால் என்னென்ன அதிசயம் உடம்பில் நடக்குமென்று தெரியுமா?



உடல் ஆரோக்கியத்தைச் சிறப்பாக வைத்துக் கொள்ள இயற்கை நமக்கு அளித்த ஒரு வரப்பிரசாதம் தான் பழங்கள். இந்தபழங்கள் மிகவும் சுவையானவை மட்டுமின்றி, ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்த தேவையான சத்துக்களையும் உள்ளடக்கி இருக்கின்றது. பழங்களுள் பல வகைகள் உள்ளன. அதில் மாதுளம் பழம் அனைத்து வயதினரும் சாப்பிட ஏற்ற அற்புதமானபழம். இந்தப் பழத்தில் கலோரிகள் குறைவு, நார்ச்சத்து, வைட்டமின் சிவைட்டமின் கே, பொட்டாசியம், போலேட் மற்றும் அன்ரி-ஒக்ஸைட்டுக்கள் போன்றவை ஏராளமான அளவில் நிறைந்துள்ளன.

### உள் வீக்கம் குறையும்

மாதுளம் பழத்தைத் தினமும் உட்கொண்டு வந்தால் இதய நோய், சர்க்கரை நோய், புற்று நோய் போன்ற பல ஆரோக்கிய பிரச்சினைகளுக்குப் பங்களிக்கும். உடனினுள் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கிறது. ஆய்வுகளில் கூட ஒருவாரத்திற்கு தினமும் மாதுளம் பழத்தைச் சாப்பிட்டு வந்தால், அதில் உள்ள அன்ரி-ஒக்ஸைட்டுக்கள் மற்றும் அழற்சி எதிர்ப்புப் பண்புகளைக் கொண்ட புனிகலஜின்ஸ் எனப்படும் சேர்மங்கள் நாள்பட்ட ஆரோக்கியப் பிரச்சினைகளின் அபாயத்தைத் தடுப்பதாக தெரியவந்துள்ளன.

### புற்று நோய் தடுக்கப்படும்

ஆய்வுகளின்படி, மாதுளம் பழத்தில் உள்ள பல்வேறு சேர்மங்கள் புற்றுநோய் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டவை. எனவே, தினமும் மாதுளம் பழத்தை உட்கொண்டு வருவதன் மூலம், உடலினுள் புற்றுநோய்க் கட்டிகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. குறிப்பாகக் கல்லீரல் புற்றுநோய் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோய் போன்றவற்றைத் தடுக்கலாம்.

### இதயநோய் தடுக்கப்படும்

மாதுளம் பழத்தில் பாலி∴பீனோலின் கலவை அதிகம் உள்ளன. இவை இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகின்றன. மேலும் இதயம் தொடர்பான பிரச்சினைகளைக் கொண்டவர்கள் தினமும் மாதுளம் பழ ஜூஸை அல்லது மாதுளம் பழத்தை உட்கொண்டுவந்தால், நிலைமை மோசமாவது தடுக்கப்படுவதோடு, இதய ஆரோக்கியம் சிறப்பாகப் பராமரிக்கப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே, இதயம் ஆரோக்கியமாக இருக்க விரும்பினால், மாதுளம் பழத்தைத் தினமும் உட்கொள்ளும் வழக்கத்தைக் கொள்ளுங்கள்.

### சிறுநீரக ஆரோக்கியம் மேம்படும்

தினமும் மாதுளம் பழத்தை சாப்பிட்டு வருவது, சிறுநீரகக் கற்கள் உருவாகும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது. ஆய்வுகளின் படி, ஏற்கனவே சிறுநீரகக்கல் பிரச்சினைகளைக் கொண்டவர்கள் இந்தப்பழத்தின் சாறு அல்லது இந்தப் பழத்தை உட்கொண்டு வந்தால், மீண்டும் சிறுநீரகக் கற்கள் வருவது தடுக்கப்படுவது தெரியவந்துள்ளது. அதோடு மாதுளம் பழமானது இரத்தத்தில் ஒக்ஸைட்டுக்கள், கல்சியம் மற்றும் பொஸ்பேற்றுக்கள் அடர்த்தியை சீராகப் பராமரிக்க உதவிபுரிவதன் மூலம், சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கிறது.

# ஈரப்பலாக்காய்க் கறி

## தேவையான பொருட்கள்



| | | |
|---|---|---|
| ஈரப்பலாக்காய் | - | 01 |
| பேரிய வெங்காயம் | - | 01 |
| பச்சை மிளகாய் | - | 04 |
| மிளகு | - | 01 மேசைக்கரண்டி |
| பூண்டு | - | 06 பல்லு |
| தேங்காய்ப் பூ | - | 01 கைப்பிடி |
| சீரகம் | - | 01 தே.கரண்டி |
| கறிவேப்பிலை | - | 01 நெட்டு |
| எண்ணெய் | - | 03 மேசைக்கரண்டி |
| மஞ்சள் தூள் | - | சிறிதளவு. |
| தேசிப்புளி | - | 01 மேசைக்கரண்டி |
| உப்பு | - | தேவையான அளவு |
| கடுகு | - | சிறிதளவு |

## செய்முறை :

- ஈரப்பலாக்காயைத் தோல் நீக்கிச் சீவி அளவான துண்டுகளாக வெட்டிக் கழுவி எடுத்துக் கொள்ளுங்கள்.
- வெங்காயம், பச்சை மிளகாய் என்பவற்றைத் துப்பரவு செய்து அளவான துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளுங்கள்.
- மிளகு, மஞ்சள் தூள், பூண்டு, தேங்காய்ப்பூ, சீரகம் என்பவற்றிற்கு அளவிற்கு தண்ணீர் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ளுங்கள்.
- பாத்திரத்தில் வெட்டிய ஈரப்பலாக்காயை இட்டுத் தேவையான அளவிற்கு தண்ணீர் மற்றும் உப்புச் சேர்த்து மூடி அவியவிடவும். பலாக்காய் முக்கால் பதமாக அவிந்து வரும் போது அரைத்து வைத்திருந்த கூட்டைச் சேர்த்து வேகவிட்டு நீர்த்தன்மை முற்றாக வற்றியதும் இறக்கி வைக்கவும்.
- இறுதியாக தாச்சியில் எண்ணெய் விட்டு சூடான பின் கடுகு, வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை என்பவற்றையிட்டு நன்றாக வதங்கிய பின் அவித்து வைத்துள்ள பலாக்காயைச் சேர்த்துக் கலந்த பின் இறக்கி தேசிப்புளி விட்டுப் பரிமாறினால் சுவையாக இருக்கும்.

நீங்களும் சமைத்து, சுவைத்துப் பாருங்களேன்.

---

# Milk Toffee

## தேவையான. பொருட்கள்:



மில்க்மெயிட் - 1 ரின்
சீனி - 1/2 கப்
தண்ணீர் - 1/2 கப்
Butter - 2 மேசைக்கரண்டி

செய்முறை: அடுப்பில் தாச்சியை வைத்து மில்க்மெயிட், சீனி, தண்ணீர் சேர்த்து 12 நிமிடம் வரை கையில் ஒட்டாதபடி கிளறவும். இறுகிய பதத்தை அடைந்ததும் வட்டர் தடவிய றேயில் கொட்டி சமப்படுத்தியதும் இளம் சூட்டில் துண்டுகளாக வெட்டி பரிமாறலாம்.

S.Kalaichelvi

# "செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"



2024ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு எம்மத்தியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் இ. ராகுலநாயகி அம்மணி அவர்களைப் பற்றிய ஒரு பார்வை. மகளிர் மகத்துவம் போற்றும் இம் மாதத்தில் சிறப்பு மிக்க இரும்புப் பெண்மணியை பற்றி இப் பெண்ணியம் பகுதியில் தருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சாதனை நாயகியாக செயற்பட்டு வரும் இ. ராகுலநாயகி அம்மணி பற்றிய சிறப்புகளை அவரால் உருவாக்கப்பட்ட "நாவெளி" மின்னிதழ் பத்திரிகையில் தருவதில் பெருமை அடைகின்றேன்.

இராசநாயகம் தெய்வநாயகி தம்பதியினருக்கு இளைய மகளாக மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி எனும் ஊரில் பிறந்தவர் தான் ராகுலநாயகி அம்மணி அவர்கள். இவருக்கு உடன் பிறந்தவர்கள் 4 சகோதரிகளும், ஒரு சகோதரனும். 1990களில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது, தனது தாயையும், தமக்கையையும் ஒரே நாளில் பறிகொடுத்த சோகம் இவருக்குள் உண்டு. அது மட்டுமல்லாமல் தனது சகோதரனையும் யுத்த காலத்தில் இழந்து, தனது தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து வந்தவர் எமது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் ராகுலநாயகி அம்மணி அவர்கள். இவருடைய நேர் மூத்த சகோதரி இவருக்குத் தாயாக இருந்து பராமரித்ததாகவும், படிப்பித்ததாகவும் இவரது வாய்மொழி பேச்சுக்களின் மூலமாக எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது.

.

ராகுலநாயகி அம்மணியின் கல்வி வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், செங்கலடி மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்ற இவர் தரம் இரண்டு தொடக்கம் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரம் வரை மட்டக்களப்பு புனித சிசிலியா மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றார். தனது பாடசாலைக் கல்வி காலங்களில் பஸ் பயணம் செய்யும் போது தான் பெற்ற அனுபவங்களையும், தனது குறும்புத் தனத்தையும் அடிக்கடி பகிர்ந்து கொள்வார். 2ஆம் ஆண்டு கல்வி கற்கும் போதே தனிமையாக பஸ்ஸில் சென்று வந்தேன். இந்த தைரியத்தை எனக்கு எனது தாய், தந்தையே வழங்கியிருந்தனர் எனவும் அடிக்கடி கூறுவதன் மூலம் இவரது தைரியத்தையும் கம்பீரத்தையும் உணர்ந்து கொள்ள முடிந்தது. தொடர்ந்து கல்வி பொதுத்தராதர உயர்தரத்திற்காக மீண்டும் செங்கலடி மகாவித்தியாலயத்தில் இணைந்து 1995ஆம் ஆண்டு உயர்தரத்தை முடித்து, கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற்காக சேர்ந்து கொண்ட இவர், 2000ஆம் ஆண்டு தனது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தார். அதனையடுத்து, ஐந்து மாதங்கள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதன் பின்னர் 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் திகதி இலங்கை நிருவாக சேவையில் இணைந்து கொண்டார். ஒரு வருடம் பயிற்சியைப் பூர்த்தி செய்து 2004.09.01ஆம் திகதி தொடக்கம் 2009.04.06ஆம் திகதி வரை உதவி பிரதேச செயலாளராக வாகரை பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார். 2009.04.07ஆம் திகதி பிரதேச செயலாளர் என்ற பதவியை பெற்றுக் கொண்ட இவர், எட்டு வருடங்களுக்கு மேலாக வாகரை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக பணியாற்றினார். வாகரையில் தனது பணியில் பல சவால்களை எதிர்கொண்டு தைரியமாகவும் மிகவும் அர்ப்பணிப்புடனும் மக்கள் நலனுக்காக சேவையினை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் சுனாமித் தாக்கம், மற்றும் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, உட்கட்டமைப்பு, மற்றும் வாழ்வாதார ஆற்றுப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை மிகத்திறன்பட வழங்கி இருந்தமையினை அறிய முடிகிறது. அதன் பின்னர் 2017.11.01ஆம் திகதி தொடக்கம் 2023.08.01ஆம் திகதி வரை வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகப் பணியாற்றினார். வெல்லாவெளிப் பிரதேச செயலகத்தினைப் புத்துருவாக்கம் செய்ததோடு, உற்பத்தித் திறன் விருதினையும் பெற்றுக் கொடுத்திருந்தார். அத்துடன், கிராமங்கள் தோறும் நிருவாக முறைமையினை ஏற்படுத்தி, பொதுமக்களுக்கான பல்வேறு சேவைகளையாற்றி, மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

இவரது பட்டப்படிப்பை நோக்கும் போது Master of Administration, Master of Sociology என்ற பட்டங்களை நிறைவு செய்துள்ளார். இவை மட்டுமல்லாமல் இந்தியாவின் டெல்லி ஹம்ராட் பல்கலைக் கழகத்தில் Certificate of Federal Studies என்ற பயிற்சி நெறியையும், தாய்லாந்து நாட்டில் Costal Conservation Management என்ற பயிற்சி நெறியையும் நிறைவு செய்துள்ளார். இவர் கவிஞராக, வானொலி நாடக எழுத்தாளராக, பாடலாசிரியராக, ஓவியராக, நடனக் கலைஞராக, குறும்பட இயக்குநராக, நாடக இயக்குநராக, பத்திரிகையாளராக, சிறந்த நிருவாகியாக என்று தன்னகத்தே பல்வகையான திறன்களைக் கொண்டுள்ளார்.

கடந்த 2023.08.02ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடமையினைப் பொறுப்பேற்று தனது பணியினை தொடங்கினார். கடமையினை பொறுப்பேற்ற நாள் தொடங்கி இன்றைய நாள் வரை பிரதேச செயலகத்திற்காக அவர் ஆற்றி வரும் சேவைகள் மிகவும் சிறப்பானவை.

இவர் எவ்வளவு விடயங்களை சாதித்தாலும் எதனையும் வெளிப்படுத்தவே மாட்டார். மிகவும் அமைதியாக இருப்பதுடன், தற்பெருமை தேடாதவர். இவர் சகல துறைகளிலும் அறிவையும் திறனையும் தன்னகத்தே கொண்டு செயற்படும் ஆற்றல் மிக்க சிங்கப்பெண்.

நாவிதன்வெளியில் இவர் தனது கடமைக்கு அப்பால் ஆற்றிய பணிகள் எனும் வகையில்,

1. மந்தபோஷாக்கு பிரச்சினை உள்ள குடும்ப பிள்ளைகளுக்கு போஷாக்கு மட்டத்தினை அதிகரிக்க சத்துணவு பொதி வழங்கியமை.
2. பிரதேச செயலகத்தில் சீருடையினை நடைமுறைப் படுத்தியமை.
3. அம்பாறை மாவட்டத்தில் முதலாவதாக நாவிதன்வெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு ஊழல் எதிர்ப்பு, மற்றும் நேர்மைத்திறன் பயிற்சிகளை வழங்கியதுடன், உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.
4. வயல் காணியில் கட்டப்பட்ட வீடுகளுக்கு நீர், மின்சார வசதி வழங்க திட்டமிட்டமை.
5 ‘‘வர்ண விருதுகள்’’ எனும் நிகழ்வின் ஊடாக, பிரதேசத்திலுள்ள சாதனையாளர்களைக் கௌரவித்து பாராட்டுகின்ற நிகழ்வினை மிகவும் பிரமாண்டமாக ஏற்பாடு செய்து நாவிதன்வெளிப் பிரதேசத்தை கௌரவப்படுத்தியமை.
6. அலுவலக உத்தியோகத்தர்களைக் கொண்டு மேடை நாடகம் ஒன்றை அரங்கேற்றியமை.
7. பிரதேச செயலகத்திற்கான பெயர்ப் பலகையினைப் புத்தாக்கச் சிந்தனையுடன் வடிவமைத்ததுடன், பிரதேச செயலக வளாகத்தினைப் புத்துருவாக்கம் செய்து வருகின்றமை.
8. ‘‘நாவெளி’’ எனும் மின்னிதழ் பத்திரிகையினை மாதந்தோறும் வெளியிட்டு பல்சுவைப் பத்திரிகையாக அதனை மிளிரச் செய்கின்றமை.
9. உத்தியோகத்தர்களை பொதுமக்கள் கடமையின் நிமித்தம் செயற்படுவதற்கான பொறிமுறையை வகுத்தளித்தமை.
10. பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு காலங்கடந்த பிறப்பு சான்றிதழைப் பெற்றுக்கொடுத்தமை
11. கைவிடப்பட்ட கிராமக் குளங்களில் மீன் குஞ்சுகள் வளர்ப்பினை ஆரம்பித்து வைத்தமை
12. முறையான காணி விசாரணைகளை மேற்கொண்டு காணிப்பிணக்குகளைத் தீர்த்துக்கொடுக்கின்றமை.
13.அரச திணைக்களங்களுக்கு முறையான காணி அனுமதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றமை.
14. அடையாள அட்டை இல்லாத முதியோர்களுக்கு அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தமை.
15. பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மில்கோ நிறுவனத்துடன் பேசி நேரடியாக பசும்பாலைப் பெற்றுக்கொள்ள வேலைத்திட்டங்களை மேற்கொண்டமை.
16. உற்பத்தியாளர்களது வியாபார பதிவு செயற்பாடுகளை இலகுபடுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தமை.
17. குறும்படமொன்றினைத் தயாரித்து போட்டி நிகழ்விற்கு அனுப்பியமை.
18. விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்குரிய அலகு ஒன்றினை அல்-ஹிதாயா பாடசாலையில் ஏற்படுத்திக் கொடுத்தமை.

இவ்வாறான பல சேவைகளைச் செய்து மக்கள் சேவைக்கு என அவதரித்த இவர், நாவெளியை ஆளவந்த நாயகி. பல்வேறு திறன்களுக்கும், பலபட்டங்களுக்கும் சொந்தக்காரி, பல துறைகளிலும் அனுபவசாலி என அடுக்கிக்கொண்டே போகுமளவிற்கு பல்கலைகளும் பெற்று உயர்ந்திருக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண். மக்களுக்கு சேவை செய்வதே தன் பணி என்ற தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்டு செயற்படும் இவ் இரும்புப் பெண்மணியைப் பற்றி, மகளிர் போற்றும் இம் மாதத்தில் சாதனைப் பெண்ணாகத் தருவதில் பெருமையடைகின்றோம்.

திருமதி திலகராணி கிருபைராஜா
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம்
நாவிதன்வெளி

**உலகிலேயே நீ திருப்திப்படுத்த வேண்டிய ஒரே ஆள் “உன் மனசாட்சி” மட்டுமே.**

***எண்ணம் உறுதியாக இருந்தால், எண்ணியபடி உயரலாம்!
நமது எண்ணம் தான் நம்முடைய எதிர்காலத்தை உருவாக்குகிறது!***

## ஆரோக்கிய பழமொழிகள்

மருந்தேயாகினும் விருந்தோடு உண்
சுட்ட எண்ணையைத் தொடாதே வறுத்த பருப்பை விடாதே
வெட்டி வேரில் விசிறியும் விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு
வெந்தயம் போடாத கறியும் கறியல்ல சந்தையில்லாத ஊரும் ஊரல்ல
வில்வம்பழம் தின்பாய் பித்தம் போக பனம்பழம் திண்பாய் பசி போக
கத்தரிக்காய்க்குக் காம்பு ருசி வெள்ளரிக்காய்க்கு விதை ருசி
பொண்ணான் கண்ணிக்கு புளியிட்டு ஆக்கினால் உண்ணாப் பெண்ணும் ஒரு உளக்கு உண்ணும்
ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ

## இயற்கை மருத்துவம்

மூளைக்கு - வல்லாரை
எலும்பிற்கு - இளம் பிரண்டை
பசிக்கு - சீரகமிஞ்சி
தோலுக்கு - அருகுவேம்பு
அம்மைக்கு - வேம்புமஞ்சள்
முடிவளர - நில நெல்லி
பல்லுக்கு - வேலாலன்
தொண்டைக்கு அக்ரசாரம்
நரம்பிற்கு - அமுக்குரான்

## காலை உணவைத் தவிர்த்தால் ............

வழக்கமாக மூன்றுவேளை உணவில் எதைத் தவிர்த்தாலும் இன்சுலின் அதிகரிக்கும். இதுவே மன அழுத்தத்திற்கும் வழி வகுக்கும். காலை உணவு என்பது உடல் நலனில் மிக முக்கிய பங்காற்றுகிறது. இரத்தத்தில் சக்கரை அளவை சரியான அளவில் வைத்து உடல் நலனைப் பாதுகாக்கிறது. எனவே காலை உணவை எக்காரணத்தைக் கொண்டும் தவிரத்தலாகாது.

## கேன்சர் வராமல் தடுக்கும் 15 உணவு வகைகள்

பூண்டு
திராட்சை
மஞ்சள்தூள்
மாதுளை
அத்திப்பழம்
தொடம்பழம்
காலிபிளவர்
கிறீன் ரீ
முருங்கைக்கீரை
இஞ்சி
எலுமிச்சை
மிளகாய்
தக்காளி
முட்டைக்கோஸ்
கீரை வகை

## ஸ்கேன் மூலம் பார்க்க முடியாதது ஏன்?

குடல்புண் இருப்பதை ஸ்கேன் செய்து பார்க்க முடியாது. குடல், வயிறு, நுரையீரல், உணவுக்குழாய், மூச்சுக்குழாய் போன்றவற்றை ஸ்கேனில் பார்க்க முடியாது. ஏனென்றால் இந்த உறுப்புக்களினுள்ளே காற்று இருக்கும். இதனால் ஒளி அலைகள் இதனை ஊடுருவிச் செல்லாது என்கிறது நவீன அறிவியல்.

# ஆங்கில மருத்துவத்தின் தோற்றம்

*மனிதனது அச்ச உணர்வின் காரணமாக தோன்றிய கருத்துக்களே முதலில் மதமாகவும் பின்னர் மருத்துவமாகவும் உருவெடுத்தது. இவ்வாறாக வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட கால கட்டம் வரை மதமும் மருத்துவமும் பின்னிப் பிணைந்திருந்தது மறுக்க இயலாத உண்மையாகும்.*

*ஆனால் இது ஒரு காலகட்டம் வரை மட்டும்தான். அறிவியல் வளர வளர மதத்திற்கும் மருத்துவத்திற்குமிடையே இருந்த தொடர்பு மெதுவாக அறுபட ஆரம்பித்தது. எனவே இன்றுவரை அறிவியல் அடிப்படையில் இயங்கிவருவது நவீன மருத்துவம் (அலோபதி மருத்துவம்) என்ற பெயரில் அழைக்கப்படும் ஆங்கில மருத்துவ முறையேயாகும்.*

தொடரும்...

## பெண்ணே! நீ பூந்தோட்டம்

பெண்ணே! குப்பைகளை சுமந்துகொண்டு
செல்ல
நீயொன்றும்
குப்பை பெட்டி அல்ல
பூமரங்களை சுமந்து நிற்கும் பூந்தோட்டம்

பெண்ணே!
உன் மௌனம் கண்டு
வாய் பேசா மடந்தை என்று எண்ணுவர்
உண்டு
நீயோ ஞானம் பெற்ற ஞானி கண்ட
பக்குவமானவள் என்று அறியும் நாள் வரும்
கலங்காதே!

புன்னகை தேசத்து பூவரசு என்று
அங்கலாவிப்பவர் அவனியில் அதிகம்
உண்டு
புறமுதுகு பேசும் மேதாதைகளை எண்ணி
மாள நீயொன்றும் கிணற்று தவளை அல்ல
உலகுக்கே ஒளியூட்டும்
உதயசூரியன்

தாமரைக்குளத்து தவளைகள்
அறியவதில்லை
தாமரை மலரிலுள்ள தேனின் சுவையையோ
தேடி வந்து தேனை அருந்தும்
வண்டு போல நாடி வரும்
நல்லவர்களை நாவினிக்க பேசிடு
நலம் வாழ நல்வழி சொல்லிடு

பெண்ணே!
பேராசை கொண்ட பிறவி அல்ல
பொழுதை வீணே கழிக்க கிடைத்த
வாழ்க்கை ஒருமுறை
சுவடுகளை பதித்தே சென்றுவிடு
சுமைகளை சுமந்திடாதே!
சுடுகாட்டுக்கு செல்லும் வரிசையில்
எல்லோரும் நின்றுகொண்டிருக்கின்றோம்
எனும் உண்மை
உலகு அறிந்தும்
ஏனோ பலசமயம் மறந்தே
பயணிக்கிறார்கள்
நீயாவது உலகு எனும் வண்டிக்கு
அச்சாணியாக இருந்துவிடு

ஜெனிதா மோகன்

## ஹைக்கூ கவிதைகள்

வரைந்து வைத்த ஓவியத்தில்
தூரிகையின் விளையாட்டு
-வாழ்க்கை

தண்ணீர் அழைத்திட கைகள்
தொட்டது வண்ணம் கலைந்தது
-நிலா

ஆடிய களைப்பில் ஓய்வு எடுக்கிறது
-மண்டபத்தில் பிணம்

வானவில்லிடம் வர்ணங்களை
கடன் வாங்கியது
- வண்ணத்துப்பூச்சி

மூடுடாத தீயில் சூழ்ந்தது புகை
 - பனிமூட்டம்

சுவரில் வரைந்த ஓவியங்கள் பேசிக்
கொண்டிருக்கின்றன -உணர்வுகள்

சறுக்கிய தவளை கிணற்றில்
விழுந்தது -நீரின் சிதறல்கள்

பச்சைத் தோரணத்தில் நிழல்
படங்கள் -பசுமை

மேகம் மூடும் வெண்பனி மூட்டம்
மேகம் நீங்க நீலம் தேடும்
-வானம்

விரும்பாத பந்தம் முடிச்சு
போட்டது - ஜாதகம்

அலை போலே நெளிந்து வரும்
பரந்த வானில் - மேகக் கூட்டங்கள்

வாழ்க்கையின் சறுக்கல்களால்
வாய்களின் முணுமுணுப்பு -
வேண்டுதல்

கனவுகள் பலிக்காது ஆழ்ந்த
உறக்கத்தில் -மரணம்

வானளவில் புகைப்படங்கள்
வர்ணனைக்குள் அடங்காது -
இயற்கை

ஆசைகள் தப்பில்லை அத்திவாரம்
பிழையானது
-காதல்
கலைஞனின் புல்லாங்குழல்
திருட்டுப் போனது (இயற்கை)
மூங்கிலிடம் சூரியன் மறைகிறது
உயர்ந்த கோபுரங்களில் - மலைகள்

வெள்ளைத் துணியில் படிந்தது
வெள்ளைச் சாயம் -விதி

சிலரின் பார்வைகள் சிதறியதால்
சிதைக்கப்பட்டது ஓவியம் -
பெண்

வானத்து நிலா கைகளில்
கிடைப்பதில்லை -பேராசை

ஊர்ந்து செல்லும் போட்டியில்
முதலிடம் பிடித்தது - நத்தை

இருட்டறைக்குள் செல்வதற்குள்
இயற்கையை ரசித்து விடுகிறேன்
கொஞ்சம் நில் - கல்லறை

அன்னமலை- 01
ஹைக்கூ (கவிநிலா)
கவிதைகள் யோகராசா கவிதா

## – ஒரு நிமிடம் –

அம்மா என்று சொல்ல
ஒருநிமிடம் போதும்
ஆகாயம் காண
ஒருநிமிடம் போதும்
உலகம் இயங்க
ஒருநிமிடம் போதும்
உண்மை பேச
ஒருநிமிடம் போதும்
குயில் பாட
ஒருநிமிடம் போதும்
குழந்தை மழலைக்கு
ஒருநிமிடம் போதும்
இசை கேட்க
ஒருநிமிடம் போதும்
ஈசனைத் தொழ
ஒருநிமிடம் போதும்
கவிதை சொல்ல
ஒருநிமிடம் போதும்
கற்பனைக் கதைக்கும்
ஒருநிமிடம் போதும்
இறுப்புக்கு
ஒருநிமிடம் போதும்
பிறப்புக்கும்
ஒருநிமிடம் போதும்
நிமிடம் காண நொடிகள்
போதும் நிமிடமே
யுகமானாலும் ஜென்மங்கள்
தாண்டியும் கற்ற கல்வி வாழும்

-விவிதா

# "கலைகளைத் தேடினேன் பல சிலைகளை செதுக்கிட"



அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் இயற்கையின் எழில் கொஞ்சும் அன்னமலை விவசாயக் கிராமத்தில் யோகராசா இரத்தினேஸ்வரி தம்பதியினரின் கடைசி பிள்ளையாக 1999.12.08 ஆம் திகதி பிறந்த கவிதா ஒரு இளம் எழுத்தாளர் ஆவார். படலையை தேடிய எமது பயணத்தில் எழுத்தாளர் கவிதாவை சந்திக்க கிடைத்தது இவர் தனது எழுத்துலக பயணம் பற்றி இப்படி கூறுகிறார்.

எனது 24வது வயதில் தந்தை காலமாகிவிட்டார். எனது தாய் மற்றும் சகோதர சகோதரிகளுடன் எனது இலக்கிய பயணம் தொடர்கிறது. "கவிநிலா" என்ற புனைப் பெயரில் எழுதி வருகின்றேன். சமூகத்தில் நான் உணர்ந்த விடயங்களை என் எழுத்துலக பயணத்தில் எழுத்தறிவை அலாதியாய் சமூகத்தின்மீது கண்ணோட்டம் காக்கும். நான் எழுது கோல் துவண்டுவிடா வண்ணம் கற்பனையில் சிதறிவிழும் எழுதப்படா எழுத்துக்களை எழுதுகிறேன். சமூகத்தின் பார்வையில் எழுதுவதை மட்டும் நான் நிறுத்தப்போவதில்லை.

**உங்கள் ஆரம்பக் காலம் பற்றி கூறுங்கள்.**

பாலர் பாடசாலை மற்றும் முதலாம் தரத்தை அன்னமலை கமு/சது சிறி சக்தி வித்தியாலயத்தில் படித்தேன். தரம் 2 தொடக்கம் உயர்தரம் வரை கமு/சது நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் படித்தேன். (National School தற்போது) இடர்பாடுகள் இருந்தாலும் கலைத்துறைக்கு அனுமதியளித்த என் குடும்பத்தினர்க்கு நன்றியை கூறி, சிறு வயது என்று சொல்வதை விட எனக்கு விபரம் தெரிந்த வயதிலிருந்து கலையில் ஆர்வம் உண்டு. ஏனது தாயாருக்கும் கவிதை எழுதுவதில் ஆர்வம் உண்டு அதை தொடர்ந்து கொள்ள முடியாத சூழ்நிலைகள் தந்தைக்கு கூட சித்திரம் வரையும் பழக்கம் உண்டு என நான் வரையும் போதெல்லாம் எனது தாயார் கூறியிருந்தார். தனக்குள் இருந்த கலை ஆர்வம் சித்திரம் வரைதலில் தொடங்கியது. வாசிப்பிலும் ஈடுபாடு அதன் பிற்பாடே இலக்கியத்தையும் கொஞ்சம் தட்டிப் பார்த்தேன்.

**உங்கள் திறமைகளின் வெளிப்படுத்தல்கள் பற்றி கூறமுடியுமா**

ஆம், 2016 ஆம் ஆண்டு (சா.தர) மாணவர் விடுகை தின "பொதிகை" என்ற நூலில் "நான் எழுதும் கவிதை உனக்கு புரியாது" எனும் தலைப்பில் கவிதை ஒன்றை எழுதியிருந்தேன். பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றினேன் சிறிது தோல்விகள் வந்தாலும் அதைபொருட்படுத்தாமல் தொடர்ந்து கொண்டேன். ஒரு தடவை 200M ஓட்டப் போட்டியில் 1ம் இடத்தை பெற்றதோடு கோட்ட மட்டத்தில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியின் போது 800 ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றேன்.

2018 ஆம் ஆண்டு க.பொ.த(உயர்தர) மாணவர் விடுகை தின "நவீனம்" என்ற நூலில் "பள்ளிக்கூட நாட்கள்" என்ற கவிதை எழுதினேன். பாடசாலையில் மாணவர் தலைவர் (Senior prefect) ஆக இருந்தேன். அனுபவங்கள் பலவிதம்.... அளந்து பார்க்க நேரம் இல்லை. மேலும் ITN மற்றும் Marina இணைந்து நடாத்திய Master Chef School Competition இல் கலந்து கொண்டு சான்றிதழையும் பெற்றேன்.

2019 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) "நவீனம்" விடுகை தின நூலில் "கடந்து போன பாதையில் தென்றல் வீசியதன் அடையாளங்கள் " எனும் தலைப்பில் கவிதையினை எழுதியிருந்தேன்.

**வெளியீடுகள், பெற்றுக் கொண்ட விருதுகள் பற்றி கூறுங்கள்**

"வலிமையே என் வரிகள்" 2021 துணிந்தெழு சஞ்சிகை நடாத்திய "துணிந்தெழு பெண்ணே" என்ற கவிதை போட்டியில் அறிமுகமானேன். நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடாத்திய 2021.12.29 (குறும்படப் பட்டறை) Short film Making Workshop இல் கலந்து கொண்டு சான்றிதழையும் பெற்றேன். 2022ஆம் ஆண்டு SKY TAMIL MEDIA NETWORK (PVT) ZOOM தொழில்நுட்பம் ஊடாக எனது முதல் கவிதை தொகுப்பு "இளங்காத்து" எனும் நூல் வெளியிடப்பட்டது. ஸ்கை தமிழ் (PVT) துணிந்தெழு சஞ்சிகையில் எனது இளங்காத்து எனும் நூலின் இலக்கிய நூல் விமர்சனம் 2022.04.07ஆம் ஆண்டு வெளிவந்தது ஸ்கை தமிழ் பிரதம ஆசிரியர்ஜெ.எம்.பாஸித் பானுக்கு நன்றிகள்.

**கலைத்துறையில் எதிர்காலத்தில் எதை சாதிக்க விரும்புகிறீர்கள்?**

ஏனக்குள் இருந்த தன்னார்வம் கலைத்துறையில் சாதிக்க மேலும் தூண்டியது. கவிதை, சிறுகதை, புகைப்படம் பிடித்தல், சித்திரம் வரைதல், (பரதம்) ஆடலிலும் பாடலிலும் அரங்கேற உயிர்வாழும் கலையின் காதல் தீர்ந்திடாப்பார்வை தொலை தூரம் ஆனேன். மனதோரம் கவிபாடும் பண்பெனும் சிலையிலென் அலாதியும் துன்பமும் தூரமாகும் உன்கலையின் அன்பெனும் அடைக்கலமும் பரதநாட்டியத்திலும் அதிக அலாதியான ஈர்ப்பினை கொண்டேன்.

*"கலையும் கற்றாய் பிறர் மனதில் இருந்து கலைந்து விடாதே"*

2022.09.29 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் நடாத்திய இளம் எழுத்தாளர்களுக்கான மேம்பாட்டுக் கூடலுக்கான சந்தர்ப்பம் கிடைத்தது. 2023ஆம் ஆண்டு National Ethnic Unity Foundation(NEUF) participation, 2023ஆம் ஆண்டு Youth Leadership Training Camp அங்கத்தவராக கலந்து கொண்டேன்.

2022/2023 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய (Colours Award) பிரதேச இலக்கிய போட்டித்தொடரில் திறந்த பிரிவில் "நீலியின் பங்களா" எனும் சிறுகதையை எழுதி 3ஆம் இடம் பெற்றேன்.

2024.01.04 ஆம் ஆண்டில் Youth Leadership Training நடாத்திய Dance program சந்தர்ப்பத்திற்கு நன்றி. எதிர்காலத்திலும் சிறார்களுக்கும் ஏனையவர்க்கும் என்னால் இயன்ற சமூக சேவைகளையும் செய்வேன். என்னைப்போல் வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கான எனது வாசகம் "உங்களின் தன்னார்வமே அகிலம் போற்றும் " என்னை ஊக்குவிக்கும் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய படலையைதேடி குழுவினருக்கும் "நாவெளி" ஆசிரியர் குழாமுக்கும் உத்தியோகத்தர்களுக்கும், ஏனையவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை கூறிக் கொள்கின்றேன்.

"கற்பதற்கே கலை கற்றதை பிறர்க்கும் கற்பிப்பதே கலை"

தற்போது எனது அன்னமலை கிராமத்தில் சக்தி அறநெறிப் பாடசாலையில் அதிபராக கடமையாற்றுகின்றேன்.

ஏன் எழுத்துப் பயணிக்கும்...

**நேர்முகம் காணல் : A.L.M.சினாஸ், K.நீலேந்திரன்**